ந.க. 9564/2020/க5 நாள். 7.10.2021

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தஞ்சாவூர்

# பத்திரிக்கைச் செய்தி

தஞ்சாவூர் மாவட்டத்தில் திருநங்கைகளுக்கு மின்னணு குடும்ப அட்டை வழங்குவதற்கு ஏதுவாக எதிர்வரும் 09.10.2021 சனிக்கிழமை அன்று அனைத்து வட்ட வழங்கல் அலுவலகங்களில் சிறப்பு முகாம் நடத்தப்பட உள்ளது. இம்முகாமில் 18 வயது பூர்த்தியடைந்த திருநங்கைகள் இருப்பிடத்திற்கான ஏதேனும் ஒரு ஆதாரம், ஆதாரம் இல்லையெனில் வீட்டு வாடகை ஒப்பந்த பத்திரம், புகைப்படம் மற்றும் கைப்பேசி எண் ஆவணங்களுடன் அனைத்து வட்ட வழங்கல் அலுவலகங்களில் 09.10.2021 அன்று நடைபெறும் முகாம்களில் கலந்து கொண்டு வட்ட வழங்கல் அலுவலரிடம் விண்ணப்பம் நேரில் சமர்ப்பித்திடலாம் என தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

7/10/2021

மாவட்ட ஆட்சித் தலைவர்,
தஞ்சாவூர்